உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.689/2023

பெயர் : காத்தம்மாள்(அ.சா.2)
தகப்பனார் பெயர் :
கணவர் பெயர் :செல்வமணி
வயது :42
கிராமம் :பெரியகற்பூரம்பட்டி
வட்டம் :மேலூர்
தொழில் :சித்தாள் வேலை

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

03.06.2025

முதல் விசாரணை:

செல்வமணி எனது கணவர். ஆஜர் எதிரிகளான 2 மற்றும் 3 எதிரியை தெரியும். 1ம் எதிரியான வடிவேலையும் தெரியும். 1ம் எதிரியான வடிவேல் என் கணவரின் மைத்துனர் ஆவார். என் கணவருடைய 2ம் தாரமான மீனாட்சி தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். அதன் விளைவாக சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்த மீனாட்சியின் தம்பியான 1ம் எதிரி வடிவேல் என் கணவரை அடித்துவிட்டார். நான் அதை நேரடியாக பார்க்கவில்லை. எனக்கு எதுவும் தெரியாது.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது).

அ.த.கு.வி :

இறந்த மீனாட்சி என் கணவரின் 2வது மனைவி ஆவார். கடந்த 03.06.2022ம் தேதி மீனாட்சி என் வீட்டிற்கு முன்னால் உள்ள ஆஸ்பெஸ்டாஸ் கூரையில் தூக்குபோட்டு தற்கொலை செய்து கொண்டார். 1வது எதிரியான வடிவேல் இறந்த 2வது மனைவியான மீனாட்சியின் தம்பி என்ற காரணத்தினால் மீனாட்சியின் இறப்புக்கு என் கணவர் செல்வமணி தான் காரணம் என்று கூறி அவரை 2, 3 எதிரிகளான செல்லப்பா, சோனையன் தூண்டுதலின் பேரில் கத்தியை வைத்து குத்திய காரணத்திற்காக ஆஜர் எதிரிகள் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு நான்

காவல்நிலையத்தில் நடத்தப்பட்ட விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுடன் சமரசம் செய்து கொண்டு உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

1வது எதிரி வடிவேல் என் கணவரை தாக்கியதாக வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.06.03 19:30:08 +0530

Assistant Sessions Judge

Melur